போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

ஓராண்டு	ரூ.	5 0 0
6 மாதம்	ரூ.	2 8 0
தனிப்பிரதி		0 1 6

ஆசிரியர்கள் : காஞ்சி, மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர் வாரத்தாள்

தனி இதழ் அணா 1½
வெளிநாடு அணா 2

வாள் 3 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 8 21—1—50 சனிக்கிழமை | வீச்சு 21

ஓமந்தூரார்—ஓர் விசித்திர சிருஷ்டி!

"இன்று நடைபெறுவது மக்களுடைய ஆட்சி"

"உழவர்கள் உறக்கத்தையும் சோம்பலையும் உதறித்தள்ளிவிட்டு விறிட்டு எழவேண்டும்"

"அவ்வப்பொழுது சட்டசபை பிரதிநிதிகளைத் தட்டிக் கேட்காமல் பெருந்தவறு செய்துவிட்டீர்கள்"

"எனவே சட்டசபை உறுப்பினர்கள், தங்கள் பொறுப்புகளை மறந்துவிட்டனர்."

"உலகத்துக்கு உண்டி கொடுக்கிறீர்கள்; உணவுப் பொருட்களை விளைவித்துக் குவிக்கிறீர்கள்; கால்நடைகளை வளர்க்கிறீர்கள்; நீங்கள் நிலத்தை உழுகிறீர்கள்; ஆனால் வேலைநிறுத்தம் செய்ததில்லை"

"உழவுக் கருவிகள், இரும்பு, உரம் முதலியன பெற முடியாமல் துன்பப்படுகிறீர்கள்."

"உங்கள் உரிமைக்காக, உங்களுடைய பங்குக்காகப் போராடுங்கள். தேவையைப் பெற சலியாது போராடுங்கள்."

"பொதுமக்களின் உண்மையான பிரதிநிதிகள் ஆட்சிக்கோலைப் பிடிக்க வேண்டும்.' —ஓமந்தூரார்.

"நீ நகரத்திலே படிக்கிறாய்; அது ...ல் பார்க்கிறாய்; மாலை நேரத்திலே ...ச்சாந்தி பெற மலர்வனங்க...க்குச் செல்லுகிறாய்; வானொலி ...களைக் கேட்டு இன்பம் துய்க்...ய்; நிழல்படக் காட்சிகளுக்குச் ...ன்று உற்சாகத்தோடு பொழு...ப் போக்குகிறாய்; பல நாட்டுச் ...ப்திகளைத் திரட்டித் தரும் செய்தித் தாள்களைக் கண்ணால் பார்க்கிறாய்; ஏதோ ஒரு அளவுக்கு மனிதப் பண்போடு வாழ்கிறாய்—இல்லை—மனிதன் என்ற நிலைப்போடு காலம் கழித்து வருகிறாய்!"

"உனது கோமளவல்லி உன்னுடன் கொஞ்சி, களையாடிவிட்டு, காலாகாலத்தில் உண்டு உறங்குவோம் என்று விழிகளால் ஜாடை காட்டி அழைத்து, கருத்தோடு கல்லுணவுபடைக்கிறாளே, அது போழ்து, உன் கண்களைப் பறித்துக் கொள்ளுகிற தும்பை மலர் போன்ற மல்லிகைச் சம்பா சோற்றையும், அதில் ஊற்றும் குழம்பிலே உருக்குலைந்து போயிருக்கும் துவரம் பருப்பையும், ஏதோ காசு கொடுத்துவாங்கும் கடைச் சரக்கு என்று நீ மதித்து வந்தது அல்லாது, அவை எங்கே விளைகின்றன—எப்படி விளைகின்றன—அதனை விளைவிப்பவன் எங்கிருக்கிறான்—அவன், அதற்காக, எந்தெந்த வகையில் பாடுபடுகிறான்—பாடுபட்டுவிட்டுப் பாடுபட்டதின் பயன்முழுதையும் அவன் பெறுகிறானா—அவன் வாழ்வு வளமாக இருக்கிறதா—என்பன போன்ற எண்ண அலைகள், என்றாவது உன் உள்ளத்தில் தோன்றி மறைந்தது உண்டு என்று நீ எடுத்துக்கூற முடியுமா?"

"காபஞ்சம்பா சோறுமணமாக இருக்கிறது என்று மனைவி மக்களுடன் மகிழ்ச்சி பாடு உண்டு. அதனை மண்ணில் இருந்து உமது உணவுக்கிண்ணத்திற்குக்கொண்டு வந்து சேர்த்த உழைப்பாளியை மறந்து, நீண்டகாலமாக வாழ்ந்து வந்து இருக்கிறாய். வயிற்றுக்கு முட்டு ஏற்படும் பொழுது

கூட உணவுப் பொருட்களைத்தேடுகிருயே யன்றி, அவை எப்படி உருவாகின்றன அவற்றை உருவாக்கித் தருகிறவர்கள் யார் என்று சிந்திக்காமல் இருந்து வருகிருய். இந்த நிலை மாறவேண்டும். பற்பல விதமான செய்தித்தாள்களைப் படித்துவிட்டு, சோவியத் நாட்டின் சீரைப் பார், சீனமக்களின் விழிப்பைக் காண், ஜெர்மானியின் சீரழிவை நோக்கு, அமெரிக்காவின் அந்தஸ்தை அறி, இங்கிலாந்தின் அவஸ்தையை எண்ணு, என்றெல்லாம் பேசுகிருயே, என்தோழனே உன்னை ஒன்று கேட்கிறேன், உலக நாடுகளைப் பற்றி எல்லாம் வாய்வலிக்க வாய்ப்பந்தல்போட்டு மகிழ்கிருயே, அந்த அளவிற்காவது உனக்கும் உன் குடும்பத்துக்கும், உணவு தருவதின் மூலம் உயிர் கொடுத்து வரும், பரம்பரை பரோபகாரியான உத்தம உழவனையும், அவன் மனைவி மக்களையும், அவனுடைய வேதனை வாழ்வையும், நீ இது வரையில் கண்டதுண்டா என்று? என்ன பதில் கூறுவாய்? மௌனம் சாதிப்பாய். மௌனம் குற்றத்தை ஒப்புக கொண்டதாக அர்த்தப் படுமேயன்றி, மேலும் அதே குற்றத்தைச் செய்யாமல் இருக்க நீ உறுதி கொண்டு விட்டாய் என்பதற்கான விளக்க மளிக்காதே அது!

“இனியாவது, ‘ஓம் நமச்சிவாயா’ என்று உன்னையும் அறியாமல்உன்கா குளறிக் கொண்டு இருப்பதை இன்றோடாவது விட்டொழி; பிரபந்தம் ஓதி வைகுண்டத்தில் இடந் தேடிக் கொள்ளப் போட்டியிடுவதையும் நிறுத்திக்கொள்; இந்த உலகத்து வாழ்வைத் தேடும்—வாழ்விழந்து கிடக்கும் கோடான கோடி வாய் செத்த பூச்சிக்களான மக்களுக்கு வாழ்வைத் தேடித்தர முயற்சி செய். இந்த நல்ல நோக்கத்தில் நீ நாட்டம் கொள்வதற்கு, முதற்கண் தேவையாக உள்ள, உழவர்களின் பரிதாபமான இன்றைய வாழ்வின் தரத்தை ஆதியோடந்தமாக அறிந்துகொள்ள ஆர்வம் காட்டு.”

இது போன்றதோர் உபதேசத்தை நகரவாசிகளைப் பார்த்து நாம்சொல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது.

எந்த ரகமான ஆலையில் பணிபுரிகிறவர்களானாலும், விதவிதமான பணிபுரியும் பாட்டாளிகள்—அரசியலார் அலுவல் அகங்களிலே செயலாற்றும் சிப்ராளர்கள்—வாழ்க்கைத் துறைகள் பலவற்றிலும் பணிபுரிந்திடும் நல்லவர்கள—அனைவரும், உணவை உற்பத்திச் செய்யும் இந்த நாட்டு உழவர்கள் பெறறுள்ளவாழ்க்கைத் தரத்தைத், தாங்கள் பெற்றுள்ள வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எலும்புருவாக இருக்கும் உழவன் தெரியக்காணலாம். அவனைக் காற்று அடித்துக் கொண்டு போய்விட்டால் தடுப்பதற்காக அவன் தோளை அழுத்திக் கொண்டிருக்கும் கலப்பையைப் பார்க்கலாம். போதுமான தீவனம் இல்லாமல் மரணத்தின் பிடியில் சிக்குண்டு கிடக்கும்உழு மாடுகள் கண்களில் படும். வாழ்வின் சுமையால், காலம் வரும் முன்பே கிழடு தட்டிப்போன உழத்தி, பட்ட மரம் போல் இருப்பதைப் பார்க்கலாம். அழுகிய பிணத்தைக் கொத்தித் தின்னும் காக்கைக் கூட்டம் போன்ற எதிர்கால உழவர் உருவங்கள் அவனைச் சுற்றி இருப்பதும் கண்கொள்ளாக் காட்சியாகும். ஒரு உழவன் குடும்பம் இது.

இத்தகைய உழவர் குடும்பம் தங்கும் மாளிகையைப் பற்றின விரிவான விளக்கம் வீண். குடும்பத்திற்கான தட்டுமுட்டுப் பொருட்களோ மண்குயவர் ஆக்கியது—அவர்கள் வீட்டுக் குழந்தைகள் மராமத்துப் பார்த்தது. அணிகள் பலப்பல பூட்டுவதற்கான காது மூக்கு துவாரங்கள் உண்டு உழத்திக்கு. அவைகளை அடைத்துக் கொண்டு இருப்பது விளக்குமாற்றுக் குச்சி. ஒரே ஒரு ஆடை; இனி கிழிய முடியாத நிலையில பொத்தல்கள் அனந்தம் அதில்! நாகரிக உலகில் அந்த உழவர்களும் இருக்கின்ற காரணத்தாலோ என்னமோ மரஉரி பூணும் மனவளத்தை மட்டும் இன்னமும் பெருமல் இருக்கிருர்கள்! நல்லவேளை!

பசி பொறுக்கமுடியாத சந்தர்ப்பத்தில் கொஞ்சம் புளித்தகூழ்! வயிற்றில் மீதமுள்ள இடத்தை நிரப்புவதற்கு ஏராளமான நீர்—அதுவும் தொத்துநோய்க் கிருமிகள் நிரம்பிய குட்டை நீர்! காற்றை உண்டு உயிர்வாழ்ந்து, உறுதி குலையாது உழைத்து, உருவாகும்பலனை மலை மலையாகக் குவித்து, அதனை மற்றவர்கள் கொண்டு போகும் போது வாய் பொத்தி வணங்கி நின்று, வறுமையோடு விளையாடிக் கொண்டு இருப்பவன் யாவனோ அவன்தான் நம் நாட்டு உழவன்.

அவன் நமக்குத் தருவது நவரசமான நல்ல நல்ல சந்தான தானியங்கள்—தானியங்களையா அவன் தருகிருன்—அவன் உடலிலே ஓடிக் கொண்டு இருக்கும் குருதியை—கொஞ்சம் கொஞ்சமாக உயிரையன்றோ உழவன் காலாகாலத்தில் நமக்கு அளிக்கிருன். நாம் அவனுக்களிப்பது? அப்படியெல்லாம் பாடுபட்டு நமக்களித்து விட்டு, அதற்குப்பதிலாகவாழ்க்கைச்சுமையை சுமக்க முடியாத நிலையிலும் மேலும் உலகம் உயிரோடு இருக்க, முணுமுணுக்காமல் சுமந்து வருகிறானே, அந்தப் பிறர் நலம் பேணும் பெரியவனை, நாம் அறிந்துகொள்ள முயலாமல் அலட்சியமாக இருந்து வருகிறோமே, அதுதான் நாம் அவனுக்காகச் செய்யும் பரோபகாரமான காரியம். நிற்க.

வயலோ வரண்டுகிடக்கும். நீர்வரப் போதுமான சாதனங்கள் கிடையாது. நீர்வரவுக்கு வாய்க்கால் இருக்கும். சேரன்சோழன் வெட்டியதாக இருக்கும். இன்று அது தூந்துபோய் இருக்கும். விண்ணை எதிர்பார்த்து, தனது உழைப்பைக் கொட்டித்துள்ள வயலிலே விதையைத் தூவுவான். வெட்டிய கிணற்றிலிருந்து விடியவிடிய இறைப்பான். எல்லாப் பாடுபடுவான். பலன் கண்டதும், காத்திருந்த வயலுக்குடையோன், தன் வயிறு எரிய எரிய, தான் பாடுபட்ட பலனைக் கொண்டு போவதையும் கண்டு வாய்திறவாமல் வீடு திரும்புவான். கடுக்காவிலே கொஞ்சம் பதரிலே பதக்கு என்று வயலுக்குடையோர் வள்ளல்தன்மையோடு, பாடுபட்ட உழவனுக்குப் பரிசளிப்பார். அவனும், அதனை, பல்லிளித்துப் பெற்றுக் கொண்டு தனது குடிசைக்குத் திரும்புவான். இதே நிலையில்தான் நமது நாட்டிலிருக்கும் லட்சக் கணக்கான உழவர்கள் பரம்பரை பரம்பரையாக உயிரோடு இறந்து வருகிருர்கள்.

இந்த உழவர்கள், தங்கள் வாழ்க்கைத் தர உயர்வுக்காக எந்த முயற்சியும், பெரிய அளவில், இது வரையில் எடுத்துக்கொண்டதில்

(9-ம் பக்கம் பார்க்க)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பினர்களை அவ்வப்போது தட்டிக் கேட்காமல் மக்கள் இருந்துத் தவறிழைத்து விட்டார்கள் என்று உணர்கிறார். இக்குற்றச்சாட்டில் முழு உண்மை இருப்பதாகச் சொல்வதற்கில்லை. தங்கள் தங்கள் குறைகளை எடுத்துக் கூறியே வந்துள்ளனர். மக்கள் குறைகளை விளக்கி—பரிகாரம் தேவை என்று விண்ணப்பித்து—மன்றமேறி உள்ளோர்களுக்கு சமர்ப்பித்துக் கொண்ட மனுறகஜர்கள் ஏராளம். அவைகள், கனங்களின் கழிவுக்கூடையில் சேர்க்கப்பட்டதேயன்றி, குறைபாடுகள் கவனித்துப் போக்கப்படவில்லை.

அமைச்சர்களை தங்கள் தங்கள் ஊர்களுக்கு மாலைமரியாதை செய்து வரவழைத்து, ஊர்வலம் நடத்தி, உபசாரங்கள் பலவும் புரிந்து, விருந்திட்டு, இன்றியமையாதத் தேவைகளைத் தெரிவித்து, 'துன்பம் தீரத்துணைபுரிக அமைச்சர்களே' என்று அச்சத்தோடு விண்ணப்பித்துக் கொண்ட ஸ்தாபனங்கள் அனந்தம். அமைச்சர்களை, அவரவர்கள் அலுவல் நிலையங்களிலே கண்டு, எங்கள் ஊர் ஏரிக்கு நீர்வருவாய்க்கு வகையில்லை; வயல்கள் காய்ந்து கிடக்கின்றன; கலனாய்ப் போயிருக்கும் கண்மாயைச் செப்பனிட்டுத் தரவேண்டும்; நல்லஉரம் கிடைக்க ஏற்பாடு இருக்கவேண்டும்; பயிர் செழிக்கப் பிண்ணாக்கு வேண்டும்: ...ருக்கு இரும்புத்துண்டு வேண்டும்; மண்வெட்டிக்குத் தகடு வேண்டும்' என்றெல்லாம். ...காரிக்கைகளைக் கிளப்பி இருக்கிறார்களே, இவைகளை எந்த அளவிற்கு நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள் நமது மதிமந்திரிகள்?

தேவைகளைத் தேடித்தராமல் மந்திரிகள் இருந்து விட்டாலும் பாதகமில்லை என்று இருந்து விடலாம். ஆளவந்தார்கள் கோபத்திற்குமன்றோ குறைகளைத் தெரிவித்தவர்கள் ஆளாக வேண்டி! இருக்கிறது 'வரவேற்பு என்று பேசி எங்களைத் தொல்லைப் படுத்துகிறீர்கள் 'என்று பண்டித ஜவகர்முதல் நமது மாகாண அமைச்சர்கள் வரை கன்னத்தில் அறைந்தது போல் பதிலளித்து இருக்கிறார்களே!

வேண்டுகோள் கூட்டம் நீங்கி, பொதுக்கூட்டம் போட்டு ஆளவந்தார்களின் கவலைபற்றப் போக்கைக்கொஞ்சம் காரசாரமாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றினால், அடுத்தகூட்டம் நடக்கவொட்டாமல்பார்த்துக் கொள்ள 144 தடை உத்தரவை அந்த நகருக்கே எடுத்து வீசுகிறது நம்சர்க்கார்! ஊர்வலங்களுக்குத் தடை விதிக்கிறது! தேவையைத் தெரிவிக்கிறவர்களுக்கு, சிறைசாலைக்குள் வரவேற்பு அளிக்கப்படுகிறது!

மந்திரிகளின் மாபெருந்தியாகத்தைப் புகழ்ந்து பேசி தேவையை நயமாக வெளியிட்டால், எங்களுக்குத் தொல்லை கொடுப்பது தான் உங்கள் தொழிலா என்று மக்களின் தேவைகளையும், தங்களுடைய பொறுப்பையும், வெகு இலகுவில் புறக்கணித்து விடுகிறார்கள் அமைச்சர்கள். வெளிப்படையாகக் கண்டனத்தைக் கூறினாலோ, அதை அடக்கப் போலீஸ் படைக்குக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது! நயம் அலட்சியப்படுத்தப்படுகிறது—ஆர்வம் அடக்கு முறைகளால் அடக்கப்படுகிறது!

மாற்றுக்கட்சியினராகிய நாம் கூறினால், பதவி பிடிப்பதை நோக்கமாகக் கொண்டு, இல்லாதவைகளை எல்லாம் இட்டுக்கட்டிப் பேசுகிறோம் என்றபழிச்சொல் நமது முகத்தின் மீது வீசி எறியப்படுகிறது. பொதுவுடமைக்காரர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களையோ, பலாத்காரமாக ஆட்சியைக் கவிழ்க்க சதிசெய்கிறார்கள் என்று, விசாரணையில்லாமலே சிறைக்குள்ளே அடைக்கப் பட்டாய்விட்டது. அவர்களுடைய ஸ்தாபனத்தையும் சட்ட விரோதமானது என்று தடுத்தாகிவிட்டது. சோஷலிஸ்டுகளையோ துரும்பென மதிக்கப்படுகிறது. இந்நிலையில் தங்கள் தேவைகளை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டுமென்ற நினைப்பும், பரிகாரம் தேடியாக வேண்டுமே என்ற ஆர்வமும், வெற்றிகிடைக்கும் வரையில் சலியாமல் கிளர்ச்சி செய்யவேண்டுமே என்ற துணிவும், வேறு எவருக்குத்தான் ஏற்படும்?

ஓமாந்தூரார் ஆட்சியில்தானே நஞ்சை மாவட்டத்தில் உழவர்கள் கிளர்ச்சி உச்சநிலையில் இருந்தது. ஓமாந்தூரார் இதற்கு என்னவிதமான நடவடிக்கையை மேற்கொண்டார்? கிளர்ச்சிக்கான மூலகாரணத்தைக் கண்டறிந்து, அதனைப் போக்குவதற்கான நல்லதீர்ப்பை நல்கவில்லையே இந்த நல்லவர்! அடக்குமுறையை ஏவி விட்டுத்தானே, உழவர்களின் கிளர்ச்சிக்கு உலைவைத்தார். அந்த அடக்குமுறையின் எதிர் ஒலி இன்றும் கேட்டவண்ணம் தானே இருக்கிறது அப்பகுதியில். பதவியை இழந்தபின்னர், பதவியில் இருந்தபோது தாம் புரிந்தவினையை இன்று, காரசாரமாகக் கண்டிக்கிறாரே, என்னபெயர் தருவதுஇவருக்கு என்று நமக்கு விளங்கவில்லை. பதவிபித்தம் அவருக்கு என்று நாம்கூறமாட்டோம், அவருடைய உள்ளத்துறவை நாம் நன்கு அறிந்து கொண்டிருக்கின்ற காரணத்தால்! பின் என்னதான்

காரணம் ஓமந்தூராரின் இந்த முரண்படும் செயலுக்கு?

"விவசாயிகள் தட்டிக்கேட்க வில்லை; எனவே சட்டசபை உறுப்பினர்கள் தங்கள் பொறுப்பை மறந்து விட்டனர்" என்று ஓமந்தூரார் குறிப்பிடுகிறாரே, அந்த சட்டசபை உறுப்பினர் காங்கிரஸ் அகராதிபடி தியாகிகளேயன்றி விவேகிகள் அல்ல! அவர்கள் அனைவரும் விடுதலைப் போர்ப் படையினரேயன்றி, நாடாளும் திறம் படைத்தவர்கள் அல்ல! ஆட்சி புரிவதற்கான அரசியல் அரிச்சுவடி ஒன்று இருக்கிறது என்பதைக்கூட அறிந்திராதவர்கள்! 'வந்தேமாதரம்— போலோ பாரதமாதாகீஜே—போலே, மகாத்மா காந்திக்கி ஜே— ஜேய் ஹிந்த்!' என்பன தான், அவர்கட்குத் தேவையான, அவர்கள் அறிந்திருந்த அரும் பெரும் அரசியல் கல்வி! நாட்டுக்கு அரசியல் விடுதலை கிடைத்த பின்னர், விடுதலைப் படையின் பணியும் தீர்ந்து விட்டது. இலட்சியத்தில் வெற்றி கிடைத்த பின்னர், விடுதலைப் படையைக் கலைத்திருக்க வேண்டும். ஆனால் நாடாளும் பொறுப்பை இப்படையினருக்கு வழங்க, இந்த நாட்டுமக்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கப் பட்டது. விடுதலை பெற்ற சூழ்நிலை நிலையில், விடுதலைப் படையினரின் தியாகத் தழும்புகளைத்தான் மக்கள் பெரிதென மதித்தனரேயல்லாமல், வேறு எதனையும் பொருட்படுத்த வில்லை. இது தான் இயல்பாக நிகழக் கூடியதும் கூட. எனவே, மன்ற மேறினர் மக்கள் பிரதிநிதிகளென விடுதலைப் படையினர்.

பிறர் தூண்டுதலில்லாமலே நாட்டு விடுதலைக்காகப் போர் பல புரிந்தவர்கள்—களத்திலே கஷ்ட நஷ்டம் பட்டவர்கள்— நாட்டு மக்களின் நலத்தைநாடும் நல்லாட்சி அமைக்காமல் போவார்களா, சுய ராஜ்யத்தைச் சுகராஜ்யமாக மாற்றாமல் இருப்பார்களா என்று மக்கள் நினைத்திருந்தனர். நம்பி வாழ்ந்தனர். இதில் தவறு என்ன இருக்கிறது? தாத்துக் கோல், அசைக்கடி இட்டாலன்றி அசைந்து கொடுக்காத திருமேனிகள் வழி வந்தவர்கள் நமது ஆளவந்தார்கள் என்பதை மக்களால் எவ்வாறு ஏற்கெனவே புரிந்து கொண்டு இருக்க முடியும்? தென்றலுக்கே சீறும் சர்ப்பமாகிறவர்கள், புயலடிக்க ஆரம்பித்தால் எந்த நிலை பெறுவார்களோ!

மக்கள் தட்டிக் கேட்காமல் இருந்ததினால் தான் பிரதிநிதிகள் தங்கள் கடமைகளை மறந்துவிட்டதாக ஓமந்தூரார் கூறுகிறாரே, அது கூட உண்மையான நிலைமையை விளக்குவதாக இல்லை. உண்மையில் கூறவேண்டுமானால், சட்டசபை உறுப்பினர்கள் இதுவரை என்றைக்குமே எண்ணி இருக்க மாட்டார்கள், தாங்கள் பொது மக்களின் ஊழியர்கள் என்பதை. முன்னாள் தாங்கள் புரிந்திருப்பதாக நம்பி இருக்கும் தியாகத்துக்கு, இந்தச்சட்டசபை பதவி, ஓர் நல் வாய்ப்பு, சொந்த வாழ்க்கையை செப்பனிட்டுக் கொள்வதற்காகத் தரப்பட்டுள்ள ஒரு சாதனம் புகழ் சிகரத்திற்குச்செல்ல தரப் பட்டுள்ள ஒரு ஏணி, என்பது தான் இந்தக் காங்கிரஸ் கண்ணியவான்களின் மறுக்க முடியாத தீர்மானம். தாங்கள் பொது மக்களின் எஜமானர்கள், என்பது தான் இவர்களுடைய உள்ளக்கிடக்கை. பொது மக்களிடம் கட்டளைக்குக் காத்திருப்பவர்களல்ல இவர்கள். பொது மக்கள் மீது சவாரி செய்யும் போதகாசிரியர்கள். இவர்கள் பொது வாழ்வில் ஈடுபட்டது முதல் இவர்கள் பெற்றுள்ள பயிற்சி ஒன்றே ஒன்றுதான். அதாவது, பிறருக்குக்கட்டளை பிறப்பிக்கும் பழக்கத்தைத்தான் நன்கு பெற்று வந்துள்ளனர்.

இந்த சட்டசபை பிரதிநிதிகள் தங்கள் கடமையை மறந்துவிட்டிருப்பதாக ஓமந்தூரார் கூறுகிறாரே, அது, பொதுமக்கள் நலத்தை நாடுவது வரையில் முழுதும் உண்மைதான். ஆனால் சொந்த லாபம் தேடுவதிலே, அவர்கள் ஒவ்வொரு நிமிஷமும் தங்கள் கடமையைக் கண்ணும் கருத்துமாகத்தான் நிறைவேற்றி வந்திருக்கிறார்கள் வருகிறார்கள். மாதச்சம்பளத்தை அதிகமாக்கிக் கொள்ள மன்றாடத் தவறியதில்லை! படிச் செலவை உயர்த்திக் கொள்ள ஊக்கம் காட்டாமல் இருந்ததில்லை! சொந்த வாணிபங்களை விரிவாக்கிக் கொள்ளத்தவறியதில்லை! சுயநலவேட்டையாடாமல் ஒரு நாள் கூட இருந்ததே கிடையாது இந்தச் சீமான்கள்!

இந்தச் சட்டசபைபிரதிநிதிகள் ஊழியர்கள் அல்ல—அதட்டித்திரியும் எஜமானர்கள்! துறவிகள் அல்லர்—காவிஉடையிலே காட்சியளிக்கும் காமிகள்! இவர்கள் கைபிடித்து இருப்பது செங்கோல் அல்ல—கண்ணுக்குப் புலனாகாத கன்னக்கோல்!

உழவுக்கருவிகள், இரும்பு, உரம் பெறமுடியாமல் துன்பப் படுகிறீர்கள் என்றும் ஓமந்தூரார் குறிப்பிடுகிறார். பலம் பொருந்திய மத்தியா சர்க்கார் வேண்டும் என்று கூறுவதிலே காந்திய ராமசாமி எவருக்கும் பின்னணியில் இருப்பவர் அல்ல. தென்னாற்காடுகோடியில் உள்ள ஒரு உழவனுக்கு உழவுக் கருவிகள் வேண்டுமானால், அவன் டில்லி வரம் கொடுக்கிற வரையில் நிலத்தை உழாமல் இருக்கவேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறான். டில்லியிலே எல்லா அதிகாரத்தையும் ஒப்படைக்க உற்சாகத்தோடு பாடுபட்டுவிட்டு, இங்கு இருக்கும் உழவனைப் பார்த்து

அவன் தேவைகளைக் குறித்து உருக்கமாகப் பேசுவது, சொந்தத்திற்கு வேண்டுமானால் நற்பெயரைத் தேடித்தர உதவியாக இருக்கக் கூடுமே ஒழிய, உழவனின் தேவை பூர்த்தியாகிவிடாது. பலம் பொருந்திய மத்திய சர்க்கார் என்ற நினைப்பைத் தூக்கி எறிந்து விட்டு, இதுபோன்ற விஷயங்களில் எல்லாம் மாகாணங்களுக்கே உரிமை வேண்டுமென்றப் பேச்சு பெருங்கிளர்ச்சியாகக் கிளம்ப வேண்டும். அன்றுதான் உழவு கருவிகள் மட்டுமல்ல, இங்குள்ளார் அனைவரின் வாழ்வும் உருப்படும். நமது திராவிடநாட்டுக் கோரிக்கை இன்னும் விரிவான அம்சங்களைக் கொண்டது. நாம் ஓமாந்தூராருக்குக் கூறுவது மாகாண சுயாட்சி என்ற நிலையோடு நின்று விடுவது. இந்தச் சிறு அளவிலாவது மாகாணங்களுக்கு அதிகாரம் இருக்கப் பார்த்துக் கொள்ள ஓமாந்தூரார் தவறிவிட்டார். காந்தியப் பயிற்சியின் பாதகவிளைவு இது. ஓமாந்தூரார், உழவர்களின் தேவைகளை தெரிகிற அளவிற்கு, அதனைப் போக்கும் சாதாரண வழிவகைகளைக் கூட அறியமறுக்கிறார். என்ன செய்வது? அவர் நல்லெண்ணம் உடையவர். அவர்காணவிரும்பும் இலட்சியத்துக்கும், அவர் பெற்றுள்ள பயிற்சிக்கும் மோதுதல் ஏற்படுகிறது. முடிவில் அவருடைய பயிற்சி வெற்றி பெற்று விடுகிறது. உபதேசத்தோடு அவர் திருப்தி அடைய வேண்டியவராகிறார்.

'உரிமைக்குப் போராடுங்கள். தேவையைப் பெற சலியாது போராடுங்கள்' என்னும் கருத்தை வழங்குகிறார் ஓமாந்தூரார். காலம் மாறுகிறது. பிரதமராக இருந்தபோது புரிந்து வந்த போதனைக்கு மாறாக இருக்கிறது இப்போதனை. நாட்டிலே, இன்று, அவர்காணும் நெருக்கடியான நிலைமை, ஓமாந்தூராரைப் பேசவைக்கிறது இவ்வாறு. 'கிளர்ச்சி வேண்டாம்—எதிர்ப்பு செய்யாதீர்கள்— பொறுமையோடு இருங்கள்,' என்று பேசிய பிரதமர் ஓமாந்தூரார்தான், இன்று ஆத்திரத்தோடு 'போர்! போர்!' என்று படைதிரட்டுகிறார் உழவர் பெரும்படை!

உழவர் போர்—உரிமையைப் பெற நடத்தப்பட இருக்கும் உழவர் போர் எவ்வாறு இருக்கும்—போர் முறைகள் யாவை—எப்பொழுது ஆரம்பம்—போரின் இறுதியான இலட்சியம் என்ன—என்பன போன்ற கேள்விக்கும், மறைமுகமாக ஓமந்தூரார் பதில் அளிக்கிறார். அப்பதிலிலேயே, இன்றுள்ள நம்மவர் ஆட்சி உண்மையான பிரதிநிதிகளின் ஆட்சி அல்ல என்று சுட்டிக்காட்டுகிறார்.

"பொதுமக்களின் உண்மையான பிரதிநிதிகள் ஆட்சிக்கோலைப் பிடிக்க வேண்டும்" ஓமந்தூரார் மனமாரக்காணவிரும்பும் ஆட்சி இதுதான். இதற்குப் போர் தேவை. இடையில் சளைத்து விடாமல் இறுதி இலட்சியம் கைகூடும் வரை போர் தேவை. ஓமந்தூரார் அழைக்கிறார் உருக்கமாக, இந்த நாட்டு உழவர்களை—விவசாயிகளை, போர்ப் படையில் தங்கள் தங்கள் பெயர்களை படை வீரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு. உழவர் வாழ்வு உயர வேண்டுமானால், உண்மையான பிரதிநிதி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தாக வேண்டும். இன்றைய ஆட்சியினர் உண்மையான பிரதிகள் அல்லர் எனவே, இந்தத் தீமையை அகற்றப் போர் தேவை. என்கிறார் ஓமந்தூரார் விரும்பும் போர் காந்தீயப்போர் முறையாகத்தான் இருக்கும் என்பதில் கடுகத்தனையும் ஐயமில்லை. ஓமாந்தூரார் உழவர் போருக்கு தலைமைதாங்கும் தளபதியாகப்போகிறார். அதன்பிறகு காந்திய ராஜ்யத்தை நிலைநாட்டப் போகிறார்.

நாட்டு நிலைமை, ஓமந்தூரார் நன்குபடம் பிடித்துக் காட்டுகிறார். இன்றுள்ள ஆட்சியின் தன்மையை அவர் தீட்டியுள்ளது நூற்றுக்கு நூறு உண்மைதான். உண்மையான பொது மக்கள் ஆட்சியை இங்குக்காண அவர் போர்தேவை என்கிறாரே அதுவும் உண்மை தான். ஆனால், அதற்கான போருக்கு அவர் தயார் தானா என்பது தான் நிச்சயமற்றதாகும். அவருடைய காந்தீயப் பார்வையால் தான், இந்த நாட்டின் முன்னேற்றம் பலவகைகளில் தடைபட்டு இருக்கிறது என்பதை எவர் கூறினாலும், ஓமந்தூரார் ஏற்றுக் கொள்ள மாட்டார். காந்தீயப் பள்ளியில் பயின்றவர் தானேஓமந்தூரார். ஓமந்தூரார் பிரதமராக இருந்த போது நடந்து கொண்ட விதத்தையும், இன்று அவர் பேசும் போக்கையும் ஒப்பிட்டுப்பார்த்தால், காந்தீயத்தில் மறைந்து கிடக்கும் முரண்பாட்டினை நன்கு புரிந்து கொள்ளலாம். நல்லெண்ணமும், நற்போதனைகளும் மட்டும் போதாது, மக்கள் திருந்திய நல்வாழ்வுபெற வாழ்வைவளமாக்க வளர்ந்து வரும் நவீன நற்கருத்துக்களின் துணையை நாடவேண்டும் ஓமந்தூரார். பழமைப் பிடியில் ஓமாந்தூரார் சிக்கியுள்ள வரையில், ஓமாந்தூரார் ஓர் விசித்திர சிருஷ்டியாகத்தான் இருந்தாக வேண்டும் என்பது முக்காலும் உண்மையாகும். ஓமாந்தூரார் நல்லவர்—தூயவர்—நேர்மதியாளர்—என்று மக்கள் சிறப்பித்துக்கூறும் நிலையோடு தான், நின்றுவிடும், காந்தீயபள்ளியில் பயின்ற ஓமாந்தூராரின் நல்ல முயற்சி. விஷயமறிந்தவர்கள் ஓமாந்தூராரை, ஓர் விசித்திர சிருஷ்டி என்றுதான் கூறுவர் சோகத்தோடு.

போர்வாள்!

திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 8
21—1—50 சனிக்கிழமை

கல்கத்தா — ஓர் அபாய அறிகுறி!

பண்டிதர் பதைப்பு—சர்தார் திகைப்பு!

இரும்பு மனிதரையும் ஏங்கவைக்கும் நிலைமை!

★

"இப்போதெல்லாம், எனக்கும் என்னுடைய கூட்டுத் தோழர்கட்கும், **கல்கத்தா** என்ற பெயரைக் கேள்விப்பட்டவுடனே, கவலையும் பதைபதைப்பும் ஏற்படுவது இயற்கையாகி விட்டது. ஏனெனில் ஒவ்வொரு நாள் காலையிலும், கல்கத்தாவிலிருந்து எங்கட்குக் கிடைக்கிற செய்தி அவ்வளவு அச்சமூட்டக்கூடியதாக இருக்கிறது. வருகிற ஒவ்வொரு செய்தியும், கல்கத்தாவில் இந்தப் பகுதியில் குழப்பம் என்றோ, அந்த வட்டாரத்தில் கலகம் என்றோ, இங்கே குண்டு விழுந்தது என்றோ, அங்கே ஒரு டிராம் கார் தீ மூட்டப்பட்டது என்றோ இந்த மூலையில் பஸ்கள் படுசூரணமாயின என்றோ, அந்த மூலையில் போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டார்கள் என்றோ தான் தெரிவிக்கும் தன்மை வாய்ந்ததாய் இருக்கின்றதே தவிர அமைதி ஓவியம் தீட்டிக் காட்டிடும் அருமை செறிந்ததாய் இல்லை. கல்கத்தா என்றால் அது ஒரு சாதாரண நகரம் அல்ல—இந்தியாவின் மிகப் பெரிய, மிக முதன்மையான நகரம். இந்தியத் தொழிற்சாலை—வாணிபம் இவற்றின் இருதய பீடம் அதுதான். அந்த நீரூற்றிலிருந்துதான் செல்வம் உற்பத்தியாகி, நாடு முழுவதும் பாய்கிறது. இப்படிப்பட்ட பெருமையும் அருமையும் மிகுந்ததோர் நகரம் குழப்பக் கடலிடையே சிக்கிச் சீரழிகிறது என்றால் எங்கள் உள்ளம் எப்படிப் பதறாமல் இருக்கமுடியும்?"

சோகமே உருவான இவ் வார்த்தைகளை வீசியிருப்பவர் சாதாரண மனிதரல்ல—சஞ்சல உள்ளம் படைத்தவரல்ல—தொட்டால் துவண்டு விடுபவரல்ல—மோதினால் நொறுங்கி விடுபவரல்ல—எதிர்த்தால் ஏக்கம் கொண்டு விடுபவரல்ல—இடுக்கண் என்றதும் பதைப்பவரல்ல, பகை வளர்கிறது என்றால் பதறுபவரல்ல—ஆபத்து என்ற சொல் கேட்டதும் அலறித் துடிக்கும் ஆமை இயல்பு வாய்ந்தவரல்ல! எஃகு உள்ளம் படைத்தவர். எத்தகைய எதிர்ப்பு கண்டும் அஞ்சாத பேராண்மை வாய்ந்தவர். வயிரம் பாய்ந்த உறுதி மிகுந்தவர். ஆபத்துதானே, வரட்டுமே, வந்தால் என்ன, தைரியம் என்னும் அணுக்குண்டு என்னிடம் இருக்கும் வரையில் ஆபத்து என்ற ஊசி வெடி என்னை என் செய்யும் என்று நிமிர்ந்து நின்று கேட்கும் நேர்மை படைத்தவர். உறுதி என்ற சொல்லின் முழுப் பொருளையும் தன் உருவத்திலேயும், தன் செயல் முறையிலேயும், தன் பேச்சுத்திறத்திலேயும் நிழலாட வைக்கும் பண்பிற் சிறந்தவர். அஞ்சாமை என்ற சிறந்த தன்மை, ஓர் உருவம் பெற்று எழுந்து நடந்தால் எப்படி இருக்குமோ, அப்படி இருப்பவர். அந்த அஞ்சாமையும், ஆற்றல் திறமும், உறுதிப் பண்பும், உடைபடா உள்ள உரமும் அவர்பால் அமைந்து கிடப்பதன் காரணமாக 'இரும்பு மனிதர்' என்று, அவருடைய கட்சித் தோழர்களால் பெருமையோடும் உரிமையோடும் அழைக்கப்படுபவர். ஆம்! மேலே பொறித்துள்ள அவல மொழிகளை அடுக்கடுக்காக அள்ளித் தெளித்திருப்பவர் அஞ்சா நெஞ்சர் என்றும் ஆற்றலரசர் என்றும் பாரத புத்திரர்களால் பன்னிப் பன்னிப் புகழப்படும் சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் தான்!

கல்கத்தா நகரிலே இன்று மூண்டுள்ள கலகத் தீ—வங்கம் எனும் சிங்கத்தின் உடலிலே இன்று ஏற்பட்டுள்ள கோரமான புண்—இந்தியத் துணைக் கண்டத்தின் வட கீழ்ப் பகுதியிலே இன்று வீசுகின்ற குழப்பப் புயல் சாதாரண மனிதர்களை மட்டும் கலங்க வைக்கும் 'சமர்த்து' வாய்ந்ததாய் இல்லை, எஃகு உள்ளம் படைத்த இரும்பு மனிதரையே குமுறிக் கொந்தளிக்கவைக்கும் 'ஆற்றல்' படைத்ததாய் இருக்கிறது.

எதற்கும் கலங்காத உள்ளம் படைத்தவர் சர்தார்—ஆனால் இதற்குக் கலங்குகிறார் அந்தக் கண்ணியமே உருவான கனவான்!

ஆயிரம் ஆபத்துக்கள் அடுக்கி வந்தாலும் திகைக்க மாட்டார் அந்தத் தீரபுருஷர்—ஆனால்

இந்தக் கல்கத்தா குமுறல், அஞ்சாத நெஞ்சு படைத்த அந்த ஆணழகரையும் துடித்துத் திகைத்துத் தேம்பியழ வைக்கிறது.

மகாத்மா மண்ணை விட்டகன்றபோதும் அவர் கலங்கவில்லை—பீகாரிலும் நவாகலியிலும் பஞ்சாபிலும் ஏனைய பல இடங்களிலும் இந்து முஸ்லிம் வெறியாட்டம் சூறாவளியெனச் சுழன்று சுழன்று வீசிகோடானுகோடி மக்களைக் கொன்று குவித்தபோதும் அவர் கலங்கவில்லை—சென்ற பல ஆண்டுகளுக்கு முன்பு, வங்க மக்கள் ஆயிரமாயிரம் பேர் பஞ்சத்தில் அடிபட்டு பட்டினியால் சுருண்டு பதைபதைத்துத் துடிதுடித்து மரணபுரிப் பயணம்புரிய மயானபுரிக்குச் சென்றபோதும் அவர் கலங்கவில்லை—வெறி பிடித்த வெள்ளை ஏகாதிபத்தியம் விடுதலைப் போர் தொடுத்த இந்திய வீரர்களைக் குண்டாந்தடி கொண்டு தாக்கி 'கோர தாண்டவம்' புரிந்தபோதும் அவர் கலங்கவில்லை—கூட்டுத் தோழர்கள் பலர் இறந்தபோது, கட்சியை விட்டுப் பலர் அகன்றபோது, பாகிஸ்தான் திட்டம் உருவானபோது, கான் சகோதரர்களை அவர் பிரிந்தபோது, கம்யூனிஸ்டு வீரர்களை அவர் இழந்தபோது, சோஷலிஸ்ட் தோழர்கள் தனிவழி கண்டபோது, ஆம், அப்போதெல்லாம் கூட, அந்த 'இரும்பு மனிதர்' குமுறியதில்லை, கலக்க உணர்வு கொண்டதில்லை, ஏக்க அந்தாதி பாடியதில்லை, வேதனை வெண்பா வாசித்ததல்லை, ஆனால், இப்போது, வாசிக்கிறார்—மனம் குமுறுகிறார்—அந்தோ அந்தோ என வாட்டம் தெரிவிக்கிறார்.

இரும்பு மனிதர் சர்தார் பட்டேல் மட்டும்தானா கல்கத்தா நிலையைக் கண்டு திகைக்கிறார்—இல்லை—மனிதருள் மாணிக்கம் பண்டித நேருவும்தான் வங்கத்து நிலையைக் கண்டு நெஞ்சம் பங்கமடைகிறார்.

நாடாளும் நல்லவர்களாகிய நமதருமைத் தேசிய சிங்கங்கள் பெற்றிருக்கும் மாபெருந் தலைவர்களோ இருவர்—அவர்களிலே ஒருவர் திகைக்கிறார், மற்றவர் பதைக்கிறார். திகைப்பையும் பதைப்பையும் தினம் தினம் ஏற்படுத்தும் விதமாகவே இருக்கிறது கல்கத்தா. ஓடிக்கொண்டே இருக்கும் டிராம்கள் திடீரென நிறுத்தப்படுகின்றன, சென்று கொண்டே இருக்கும் பஸ்கள் தடுமெனக் கவிழ்க்கப்படுகின்றன, ஓடிவரும் போலீசார் துரத்தியடிக்கப்படுகின்றனர், அவர்கள் ஓடிக்கொண்டிருக்கையிலேயே பல விடங்களில் தீ மூட்டப்படுகின்றது, அந்தத் தீயை அணைக்கவோ வகையின்றி அவர்கள் விரண்டோடுகின்றனர்—இந்த விதமாக இருக்கின்றது கல்கத்தா. ஆம், அப்படித்தான் கூறுகின்றார் சர்தார் வல்லபாய்!

யாரோ பேசுவார் பேச்சைக் கேட்டுவிட்டுக் கூறுகின்றாரா—இல்லை—நேரில் சென்று, கல்கத்தா வீதிகளில் உலவி, அங்குள்ள மக்களைக் கண்டு, முக்யஸ்தர்களைக் கலந்து பேசி, சுற்றிப் பார்த்து நிலைமையை உணர்ந்து, பிறகுதான் கூறுகிறார், எனவே அவர் கூறுவது அவ்வளவும் உண்மையாகத்தான் இருக்கவேண்டும் இட்டுக்கட்டிக் கூறிடும் இழுக்கு உரையாகவோ, ஆதாரமற்ற ஆகாய வெடி வார்த்தைகளாகவோ அவர் தரும் சொற்கள் இருக்க முடியாது.

கல்கத்தா குமுறுகிறதே இது போல, குழப்பம் தலைவிரித்தாடுகிறதே, கலகம் ஜாம் என அரசோச்சுகிறதே, வேதனைப் புயல் சுழன்று சுழன்று வீசுகிறதே, கொலை—கொள்ளை—தடபுடல்—அடிதடி இவ்வளவும் நடக்கிறதே, பொதுமக்கள் இவ்வளவையும் பார்த்துக் கொண்டா இருக்கிறார்கள், சும்மாவா கிடக்கிறார்கள், 'எது எப்படியானால் நமக்கென்ன மனமே—நம் வேலையை நாம் பார்ப்போம் உனக்கேன் துடிதுடிப்பு மனமே" என்று பதிகம் பாடிக்கொண்டா இருக்கிறார்கள்? கலகத்தை அடக்க அவர்கள் முயலவில்லையா, குழப்பத்தைப் போக்க அவர்கள் பணி ஏதும் புரியவில்லையா? இல்லையாம்! பொதுமக்கள் தம் சுண்டு விரலையும் அசைக்கவில்லையா! சுழன்று வீசும் கலகச் சூறாவளியை அடக்கச் சிறிதும் எண்ணவில்லையாம்! இதோ சர்தாரே கூறுகிறார்!:—

"நான் இந்த நகரத்திற்கு வந்தது முதற்கொண்டுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன், நீங்களும்தான் பார்க்கிறீர்கள், இவ்வளவு குழப்பத்திற்கிடையேயும் இந்த மக்கள் நமக்கென்ன என்றுதான் இருக்கிறார்கள். பொதுவாகவே இங்குள்ள மக்கள் அத்தனைபேரும், இந்தக் குழப்பநிலையைப் பொறுத்தவரை அலட்சிய சுபாவம் படைத்தவர்களாகவே இருக்கிறார்கள்"

தாமாக முன்வந்து கலகச் சூறாவளியை அடக்கிடவில்லை என்றபோதிலும், அதனை அடக்க முன்வரும் போலீஸ் பட்டாளத்திற்காவது தங்கள் ஆதரவை, ஒத்துழைப்பை. அநுதாபத்தைத் தருகிறார்களா மக்கள்? அதுவும் இல்லையாம்! "போலீஸ்காரர்கள் தங்கள் கடமையைச் செய்யும்போது அடிக்கப்படுகிறார்கள், உதைக்கப்படுகிறார்கள், விரட்டப்படுகிறார்கள். தம்மைத் தாக்கவரும் கூட்டத்தினரை, போலீஸார் திருப்பித் தாக்கி விட்டாலோ

கல்கத்தா நகரமே குமுறி யெழுந்து கூக்குரலிடுகிறது மக்கள் உரிமை போயிற்று, மக்கள் உரிமை போயிற்று என்று! போலீசாருக்கு ஒரு வார்த்தை ஆதரவு மொழி கூற, ஒரு துளி அனுதாபம் காட்ட, ஒரு சொட்டு அன்புத்தேன் சொரிய உள்ளம் படைத்தவர் யாரையும் காணோம் இங்கு!" என்று பேசியிருக்கிறார் சர்தார்!

கலகச் சூறாவளியோ, இரும்பு நெஞ்சம் படைத்த சர்தார் பட்டேல் அவர்களையும் கலங்க வைக்கும் அளவுக்கு, சுழன்று சுழன்று வீசுகிறது. பொது மக்களோ இதைப் பார்த்துக் கொண்டுசும்மா இருக்கிறார்கள் சும்மா இருப்பது மட்டுமா, இந்தச் சூறாவளியை அடக்க வரும் போலீசார் மீதே குற்றமும் குறையும் கூறத் தயாராக இருக்கிறார்கள். அது மட்டுமல்ல வேடிக்கை, போலீசாரைத் தாக்கவும் செய்கிறார்கள், தாக்கி விரட்டவும் செய்கிறார்கள்.

இவ்வளவு உண்மைகளையும் கூறுகிறார் சர்தார்! சர்தார் என்றால் நினைவிருக்கட்டும், அகில இந்தியாவின் போலீஸ் அமைச்சர்'

போலீசாரையும் விரட்டியடிக்கும் அளவுக்கு ஒரு நாட்டிலே ஒரு 'புயல்' மூண்டுவிட்டது என்றால், அந்தப் புயலை குழப்பம் என்றோ, கலகம் என்றோ, கூறுவது அறியாமை. பொதுமக்கள் அத்தனை பேரும் அந்தப் புயலை மூட்டிவிடுபவர்கள் பக்கமே இருக்கிறார்கள் என்றால், புயலை ஒரு சில குண்டர்களின் கூக்குரல் என்றோ, வேலையற்ற வீணர்களின் வெற்று வேட்டு விளையாட்டு என்றோ புகல்வது மதியீனம். மக்கள் அத்தனை பேரும் ஒப்புக்கொள்ளும் அளவிலும் நிலையிலும் ஒரு புயல் மூள்கிறது என்றால், அந்தப் புயலுக்குரிய பெயர் தான் புரட்சி!

ஆம்! இன்றையதினம் கல்கத்தாவில் மூண்டிருப்பது, புரட்சி! மக்கள் மன்றத்திலிருந்து ஓங்கி எழுந்து வீறிட்டு விளங்கும் புரட்சி! ஆட்சியாளர்களின் அநீதியை ஆணவத்தைகொடுங்கோன்மையைச் சுட்டுப் பொசுக்க வந்த எழுச்சியின் சின்னம்! காங்கிரஸ் சர்க்காரின் கையாலாகாத போக்கையும், அடக்குமுறைப் பாணங்களையும் கண்டு கண்டு சலித்துப் போன மக்கள், உரிமையை நிலைநாட்டுவதற்காகவும், தங்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இல்லமும் தராத ஒரு சர்க்கார் இனி நாடாளத் தேவையில்லை என்பதை உலகத்திற்கு உணர்த்துவதற்காகவும் தோன்றியுள்ள ஆவேசப் புயல்!

மக்கள் இதயத்தின் அடிவாரத்தில் உலவும் 'பசி' எனும் புலியின் கூக்குரல் இந்தக் கல்கத்தா குமுறல்.

அடக்கி அடக்கி நசுக்கப்பட்டுள்ள மக்களின் உரிமை முழக்கம்—விடுதலை வேட்கை—உணர்ச்சிச் சித்திரம், இந்தக் கல்கத்தா "கலகம்"

எதிர்க்கட்சிகள் அனைத்தையும் நசுக்கிவிட்டு, தம்முடன் மாறுபடும் கருத்துடையார் அனைவரையும் சிறைச்சாலையில் அடைத்துவிட்டு, தம் கொடுமைகளை எடுத்துக் காட்டும் அறப்பணி புரிந்திடும் இதழ்கள் அனைத்தையும் ஜாமீன் தோட்டாவால் சுட்டுத் தள்ளிவிட்டு தனிக்காட்டு ராஜாவாக ஆள வேண்டும் என்ற பதவி வேட்கைப் பித்துடைய இன்றைய காங்கிரஸ் ஆட்சியின் வெறியாட்டத்தை எதிர்த்து எழுந்துள்ள ஜனநாயகக் குரல் இந்தக் கல்கத்தா சம்பவம்.

எங்கோ ஒரு மூலையில் சிறைச்சாலைக் கம்பிகளை எண்ணிக் கொண்டு கிடக்கும் பரிதாபத்திற்குரிய கம்யூனிஸ்டுகள் அல்ல இந்தக் குமுறலுக்குக் காரணம். பசி! பட்டினி! பஞ்சம்! ஆட்சியாளர்களின் அடக்குமுறை! மக்களின் எழுத்துரிமை, பேச்சுரிமைகளைப் பறிக்கும் அவர்களின் 'பாழும்' திட்டங்கள்—இவைதான் இக்குமுறலுக்கான உண்மைக் காரணங்கள்! இந்தக் குமுறல் தீரவேண்டுமானால் சர்க்கார் கடைப்பிடிக்க வேண்டிய வழி, இன்ஸ்பெக்டர்—ஜெனரல்களின் மாநாட்டைக் கூட்டுவதல்ல, போலீஸ் பட்டாளங்களைப் பெருக்குவதல்ல, சிறைச்சாலைகளை விரிவாக்கிக் கட்டுவதல்ல, துப்பாக்கியையும் தோட்டாவையும் தயாராக வைத்திருப்பதல்ல அடக்குமுறை அத்தியாயத்தை அவசர அவசரமாக வாசித்தறிந்து அதை நடைமுறையில் காட்டுவதல்ல! இவையெல்லாம் அல்ல குமுறலை அடக்கும் வழிகள்!

குமுறலை அடக்குவதற்கான வழி, நேரிய வழி, நியாயமான வழி, ஒரே வழி, நல் வழி, திருவழி, பெருவழி, நல்லாட்சியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழி, மக்கள் மன்றத்தை வாட்டி வதைக்கும் பசிப்பிணி என்னும் பாதகத்தைச் சுட்டு வீழ்த்துவது! ஆம்! அதுதான்! அந்தப் பாதைவழி சென்றால் ஆட்சியாளர்கள் நற்பெயர் பெறமுடியும். இல்லையேல் மக்கள் மன்றத்திலிருந்து குமுறல் எழுந்தபடிதான் இருக்கும். அதைத் தடுக்க முடியாது—இரும்பு மனிதரால் கூடத்தான் முடியாது!

காங்கிரஸ் 'கனம்'களின் கோணல் போக்கைக்கண்டு, மக்கள் கொதித்தெழத் தொடங்கிவிட்டார்கள் அறுபது ஆண்டுகளாக மாபெருந்தலைவர்களால் அரும்பாடுபட்டு கட்டப்பட்ட காங்கிரஸ் கோட்டை இடிந்து

விழப்போகிறது, என்பதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. இப்பவோ, பின்னையோ, இன்னும் சற்று நேரத்திலோ, அந்தக் கோட்டை சடசடெனச் சரிந்து வீழ்ந்து மண்ணோடு மண்ணாக இரண்டறக் கலந்துவிடப் போகிறது.

அதற்கான முதல் அபாய அறிகுறிதான், கல்கத்தா!

கண்ணிருப்பவர்கள் காணட்டும்—சிந்தனைத் தெளிவிருப்பவர்கள் அந்த அபாய அறிகுறி புகட்டும் பாடத்தை உணரட்டும்.

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

முயற்சிக்காமல் இருந்தது கூட ஆச்சரியமல்ல. தங்களுக்கு இன்றுள்ள மிருக வாழ்வு மாறவேண்டியது முக்கியம் என்ற நினைப்புக் கூட அவர்களுக்கு இன்னும் எழாமல் இருப்பதுதான் ஆச்சரியம்.

வேறு ஒரு ரக உழவர்களும் உண்டு. சிறுசிறு நிலச்சொந்தக்காரர்கள். சொந்தத்திலே பாடுபட்டுப் பலனை அனுபவிப்பவர்கள். முன் சொன்ன உழவர்களிலும் இந்த ரகத்தினர் வாழ்க்கைத் தரத்தில் கொஞ்சம் உயர்ந்தவர்கள்தான். இது போதாது. சாதாரண மனிதத் தேவைகளில் பல, இவர்களுக்கும் தேவையானதாக இருக்கின்றன. சர்க்கார் அமைச்சர்களாயினும் சரி, வேறு எவராயினும் சரி, இவர்களைத்தான் விவசாயிகள் என்று குறிப்பிடுவர். இவர்கள் குறைபாடுகளைக் குறித்துத்தான் பலப்பல கூறுவர். மாநாடுகள் கூட்டப் பெறும். நீண்ட நீண்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும், ஆட்சிப் பீடத்தினருக்கு அறிவிக்கப் படும். ஆட்சியினரும், ஆறுதலாக இரண்டொரு வார்த்தைகள், அவர்களுக்குச் சொல்லுவர். இவைகளால் எல்லாம் குறைகள் தீருவதில்லை. கொடுமை செய்வோரின் கொட்டமும் அடங்குவதில்லை.

மற்றோர் ரக விவசாயிகள் உண்டு. இவர்கள் மைலாப்பூர்—மாம்பலத்திலே மாடமாளிகைகள் கட்டிக் கொண்டு காலங்கழிப்பர். சொந்த கிராமங்களிலே ஆயிரம் ஐயாயிரம் வேலிகள் என்று நஞ்செய் புஞ்செய்கள் இருக்கும். நூற்றுக் கணக்கிலே உழவர் குடும்பம், இந்த வயல்களிலே உழைத்து உழைத்து உடம்பிளைக்கும். அறுவடைக் காலத்திலே அந்தப் பக்கம் போவார் நிலப்பிரபு. உழவர் தம் உழைப்பின் பயனைப் பணமாக்கிக் கொண்டு வாணவேடிக்கை விட்டு மகிழ பெரும்பெரும் நகரங்களுக்குத் திரும்பிவிடுவார். இந்த மிட்டா மிராசுகள், மனித சமுதாயத்தை முன்னேற விடாமல் அழுத்திக் கொண்டிருக்கும் குன்றுகளாகும். இந்த நிலைக்கும் முடிவு கண்டாக வேண்டும்.

இந்தப் பண்ணைபார் போக்கிலே இருந்துவருவன கோயில்கள்-மடங்கள்— மடாதிபதிகள் — மகந்துக்கள்— ஜகத் குருக்கள்—இன்னும் பலப்பல அறநிலையங்கள். சமூகாய வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதும், விழிப்புணர்ச்சியை முளையிலேயே கிள்ளி எறிவதும், உலகம் மாயை என்ற பசையற்ற வாதம் புரிவதும், இந்த அறநிலையங்கள் செய்து வரும் அரும் பணியாகும். அறநிலையம் என்ற பெயர் இவைகளுக்குப் பொருந்தாது. மறநிலையங்கள் என்று மாற்றியாக வேண்டும்.

உண்மையான உழவனுக்கும் உழுநிலங்களுக்கும் புதிய நேர் தொடர்பேற்படுத்த வேண்டும். இடையிலே இருக்கும் பல ரகமான திமிங்கிலங்களை அகற்றியாக வேண்டும். அப்பொழுதுதான், சொந்த நாட்டில் வேலை கிடைக்காத காரணத்தால் கடல் கடந்துச் சென்று, வேற்று நாட்டில் கண்ணீர் விட்டு வாழும் கேவல நிலை நிற்கும். உற்பத்தியும் பெருகும். பங்கிடும் தொலையும். நாடும்செழிக்கும். பொதுவாக நமது சமுதாயத்தில் ஒரு புதிய எழுச்சியும் தோன்றும். இத்துறையில் தொண்டாற்ற முன்வர வேண்டும், நாட்டு நல்லறிவாளர்கள், கட்சி வேற்றுமைகளை மறந்து! முன்னாள் ஆண்ட ஆங்கிலேயர்கள், என்றோ களைந்திருக்க வேண்டிய இக் கேடுகளைக் களைத் தெறியத் தவறி விட்டனர். தவறினதோடு மட்டுமல்லாமல் இக்கேடுகளைக் கட்டிக் காத்தும் வந்தனர். ஆங்கிலேயர்கள் ஆட்சி புரிந்து வந்தது இந்த நாட்டின் நன்மைக்காக அல்ல — சொந்த லாபவேட்டைக்காக. எனவே, அவர்களைக் குறைகூறினது, இத்துணைக் கண்டத்தின் அரசியல் விடுதலைக்கு ஆக்கம் தந்தது. அவர்கள் அகன்று, நம்மவர் ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ள இந்நேரத்திலும், ஆங்கிலேயர்கள் செய்யத் தவறியதைக் குறித்துப் பேசிக் கொண்டு இப்பொழுதும், அந்தக்காலத்து அர்த்தமற்ற ஏற்பாட்டை உடைத்தெறிய ஊக்கம் காட்டாமல் இருப்பது, கொள்கையை— கோட்பாட்டைப் பொறுத்த வரையில், ஆங்கிலேயர்களுக்கும் நம்மவர்களுக்கும் எந்த விதத்திலும் மாறுதல் கிடையாது என்ற உண்மையைத்தான் உறுதிப் படுத்த உதவும்.

* * *

ஓமந்தூர் ராமசாமியார் இம்மாகாணத்தில் முதலமைச்சராக இருந்தவர். தமிழ் நாட்டுக் காங்கிரசைப்பொறுத்த வரையில் முதன்மையாக இருக்கிற முதியவராவார். காந்தியப் பாதை வழிசெல்லும் பண்பாடு உடையவர். காந்தீயத்தாலேயே, இந்த நாட்டில் உள்ள குறைபாடுகள் அனைத்தையும் அகற்றிவிடலாம் என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பவர். உழவன்- விவசாயியின் கஷ்டத்தை நன்கு உணர்ந்திருப்பவர். அது மட்டுமல்ல, அவர்களுடைய மனப் பாங்கையும் போக்கையும் பலகாலமாக நேரில் கண்டு பழகி வந்திருப்பவர்

அவர் கூறுகிறார், உழவர்கள் உறங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்று! உறக்கத்தை உதறித் தள்ள வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறார். இன்று நடைபெறுவது நம்முடைய ஆட்சி என்றும் ஆட்சியின் தன்மையை விளக்குகிறார். மக்கள் ஆட்சி என்ற பெயர் இருந்தும் மக்களின் இன்னல்கள் இன்னமும் கவனிக்கப்படாமல் இருக்கின்றனவே என்ற நினைப்பு ஓமந்தூராருக்குச் செந்தேள் கொட்டினது போல் தாக்குகிறது. உடனே அதற்கு ஒரு சமாதானத்தைக் கூறி, நிலைமைக்கு விளக்கம் தருகிறார். அதாவது, சட்டசபை உறுப்

(3-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுவார். பேச்சு முடிந்ததும் இவரைத் திட்டிக் கொண்டே வந்தவன் திரு. வி. க. வாழ்க என்று சொல்லிக் கொண்டே போவான். முணுமுணுத்துக் கொண்டே வந்தவனும் பாராட்டுரைகளை அடுக்கடுக்காக அள்ளி வீசிக்கொண்டே போவான். அந்த ஒற்றை நாடி மனிதர்தானே — அடே அப்பா — அவர் ஒரு பிரமாதமா என்று கேலி பேசிக் கொண்டே வந்தவன், எவ்வளவு அழகான தமிழை என்ன லாகவமாகக் கையாளுகிறார் என்று மதிப்புரை தந்து கொண்டே திரும்புவான். திரு. வி. க. அவர்கள் எந்தக் கட்சியினர் கூட்டத்திற் பேசினாலும் அந்தக் கூட்டத்தில் தவறாமல் நிகழும் நிகழ்ச்சி இது.

"முன்னணியில் தமிழ் நாட்டில் காங்கிரஸ் தொண்டு செய்தவர் என்ற முறையில் எவர்க்கேனும் பரிசில் வழங்கப் புகுந்தால் முதற்பரிசில் என் நண்பர் நாயக்கர்க்கே செல்வதாகும்" என்றார் திரு. வி. க. ஒரு முறை. முதற் பரிசில் பெரியாருக்கு ஆயின், அடுத்த பரிசில் திரு. வி. க. வுக்கே செல்லும். திரு. வி. கலியாண சுந்தரனார் 1919—25-ம் ஆண்டுகளில் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் புகுந்து, இடியேறென முழங்கி வந்தார். நாட்டின் நாலு பக்கமும் பறந்து பறந்து பணியாற்றினார். தென்னாடெங்கணும் காங்கிரஸ் விதைகளை ஊன்றினார். அவருடைய அந்த எடுப்பான குரலும், தெறிப்பான சொற்களும், விறுவிறுப்பான தமிழ் நடையும், வீராவேசமான போக்கும் தென்னாட்டுக் காங்கிரசை வளர்க்கும் எருவாயின; தழையாயின; உரம் ஆயின; நல்ல உணவாயின. அந்த உணவை நன்றாக உண்டு வளர்ந்தது காங்கிரஸ். இது அன்று! ஆனால் இன்றோ அதன் பாசிசப் போக்கு கண்டு திரு. வி. க. அவர்களே இரத்தக் கண்ணீர் வடிக்க நேர்ந்திருக்கிறது!

ஸ்பென்ஸர் கம்பெனி குமாஸ்தாவாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கினார் திரு. வி. க. கம்பெனி ஊழியரிடையே வந்தேமாதரப்பிரசாரம் செய்ததற்காக டைரக்டர் எச்சரிக்க கம்பெனியை விட்டு விலகி, சென்னை வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஆறு ஆண்டுகளும், வெஸ்லி கல்லூரியில் ஒன்றரை ஆண்டுகளும் தமிழ்ப் பண்டிதர் வாழ்க்கை நடத்தினார். அன்னி பெசண்ட் அம்மையாரின் 'ஹோம்ரூல்' கிளர்ச்சியிலும் சுரேந்திரநாத் பானர்ஜியின் வீர முழக்கங்களிலும் ஈடுபட்டு, திடீரென ஓர் நாள் அரசியல் போராட்டத்தில் குதித்தார்.

1925-ல் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறிய போதுங் கூட திரு. வி. க. விலகினாரில்லை. மயிலை சீனிவாச அய்யங்காருடன் சேர்ந்து ஓர் ஆறுமாத காலம் தேர்தலில் பிரசார பவனி வந்தார். காங்கிரஸ் சட்டசபையுள் நுழைவது அங்குச் சென்று முட்டுக் கட்டை இடவே என்று இவர் நம்பினார். பின்னே இவர்தம் நம்பிக்கை பாழ்த்தது. காங்கிரஸ், சட்டத்தை உடைக்கவில்லை. மந்திரி சபை அமைத்தது. உள்ளம் உடைந்த திரு. வி. க. 1926 ஜூலையில் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்குழுவிலிருந்து விலகினார். பின்னர், நாலணா சந்தாவிலிருந்து விடுதலை பெற்றார். என்றாலும் தன்னை ஓர் காங்கிரஸ்காரன் என்றே சென்ற ஆண்டு வரை கூறிக்கொண்டிருந்தார்.

* * *

ஆழமான தண்ணீர் மெதுவாக ஓடிக்கொண்டிருக்கும் என்றோர் ஆங்கிலப் பழமொழி உண்டு. திரு. வி. க. அவர்களின் வாழ்க்கை நீரோட்டத்திற்கு இந்தப் பழமொழி முற்றிலும் பொருந்தும். டாக்டர் வரதராசலு ஒருமுறை குறிப்பிட்டது போல, இவர் சாது முதலியார் என்று அழைக்கப்பட்டாலும், இவருடைய இருதயத்தில் டைனமோ வேலை செய்து வருகிறது. **அந்த டைனமோ,** அமைதியான முறையில்—ஆனால் இடையீடின்றி, எவர்க்கும் தெரியாமல்—ஆனால் மும்முரமாக, புதுமைக்கும் புதுமையான தன்மையில்—ஆனால் பழமைக்கு முரண்படாத வகையில், போராற்றல்வாய்ந்த ஒருவகை மின்சார சக்தியை உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறது. அந்தச்சக்தி தமிழ்நாடெங்கும் பாய்ந்து, தமிழர் இல்லந்தோறும் பாய்ந்து, தமிழர் உள்ளந்தோறும் புத்துணர்ச்சியை ஊட்டியவண்ணம் இருக்கிறது. **அந்த டைனமோ**வின் அமைதி சில ஆர்ப்பாட்டக்காரர்கட்குப் பிடிக்காமல் இருக்கலாம். **அந்த டைனமோபோல** ஓய்வு என்பதின்றி ஆனால் விளம்பரம் சிறிதும் இன்றி வேலை செய்வது சிலரால் முடியாமல் இருக்கலாம். **அந்த டைனமோ**வைக் கண்டால் சில ஓட்டை ஒடிசல்களுக்கு ஆத்திரம் பிறக்கலாம். ஆனால் அந்த டைனமோவை யாரும் போற்றாமல் இருக்க முடியாது. அதோ, அந்த டைனமோ, சென்னையில், ஒரு மூலையில், இராயப்பேட்டையில், சாது அச்சுக்கூடம் எனும் சிறு கட்டிடத்தில், அமைதியாக, தொடர்ச்சியாக, ஆண்டுபலவாக தமிழ்நாடு தழைக்க, தமிழர் வாழ்வில் இன்பம் பிறக்க, தமிழ்மொழிவளர சுழன்ற வண்ணம் இருக்கிறது. அந்தச் சுழற்சியின் உட்பொருளைச் சிலர் அறியாமல் இருக்கலாம். ஆனால் அந்தச் சிலர் உட்பட எல்லாத் தமிழருக்கும் நலம் செய்வதே அந்தச் சுழற்சி.

———

நடமாடும் திருக்குறள்!

[மா. இளஞ்செழியன்]

முப்பதாண்டுகட்கு முன்னே ஒரு தமிழ்ப் பண்டிதர் தமிழ்நாட்டு அரசியல் உலகிடை நுழைந்தார். பம்பரம் போல் சுழன்று சுழன்று வீர முழக்கம் புரிந்தார். காடு மலைகளை ஏறியும் நாடு நகரங்களைச் சுற்றியும் அழகு தமிழில் உரை பொழிந்தார். ஆங்கில மோகம் தமிழர் தலைக்கேறி இருந்த காலத்தில் தமிழ்ப் பற்றினை தமிழர் உள்ளத்தெல்லாம் அரும்பச் செய்தார். எங்கும் தமிழ் மணம், எங்கும் தமிழ்ச் சுவை எனும் நிலை நாட்டினர். அரசியல் நுணுக்கங்களை அப்படி அப்படியே குறிக்கத் தக்க தமிழ்ச் சொற்கள் கிடையாது என்று "தமிழறிஞர்"களே பறை சாற்றி வந்த காலம் அது. அத்தகைய காலத்தில்தான் அந்தத் தமிழ்ப் பண்டிதர் எங்கெங்கும் தமிழ்ப் பேச்சு மேடைகளை அமைத்தார். அந்த மேடைகள் மீது ஏறி நின்று, தமிழர் இதயத்தெல்லாம் இனிய தமிழ் ஒளி வீசச் செய்தார். தமிழர்களை தலை நிமிர்ந்து நிற்கச் செய்தார். "எங்கள் வளமும் எங்கள் வாழ்வும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று தமிழர்களை முழங்கச் செய்தார், பண்டிதர் கோலத்திலே நுழைந்து, பேச்சாளர் எனும் புது உருவம் பூண்டு, தமிழ்த்தலைவராகப் பவனிவரத் தொடங்கிய அவரைக் கண்டதும் மக்கள் திகைத்தனர் முதலில். திரண்டு குழுமினர் அவர் பக்கம் பிறகு. ஆயிரம் பல்லாயிரம் என அவர் உரையைச் செவி மடுக்க எங்கெங்கிருந்து ஓடோடி வந்தனர். எமக்கு வாழ்வளிக்க வந்த இத் தமிழ்த் தென்றல் வாழ்க வாழ்க எனக் கூவினர். "பண்டிதரா இவர்? அல்ல! நடமாடும் தமிழகம்! தமிழர் பண்பாட்டின் சின்னம்!" என்று களிப்புடன் கூறினர். பள்ளிக் கூடத்துச் சுவர்களைத் தாண்டிக் குதித்து, பிரிட்டானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்தப் பட்டு வந்த அறப் போரில் ஈடுபட்ட இப்பண்டிதர் வேறு யாரும் அல்லர். இந்த நாட்டில் உள்ள எல்லாக் கட்சியினராலும் சில காரணங்களுக்காகப் போற்றவும் வேறு சில காரணங்களுக்காகத் தூற்றவும் படுகின்ற **அன்பர் திரு. வி. க.** அவர்களேதான்!

திரு. வி. க ஒரு விசித்திர மனிதர். அவருடைய வாழ்க்கை வரலாறு பலருக்குப் புரிவதில்லை. புரிந்தவர்கள் அதைப் பின்பற்ற விரும்புவதில்லை. ஆனால் அவரைப் போற்றாமல் இருக்கவோ எவராலும் முடிவதில்லை.

நம்மால், ஒன்றை விரும்ப முடியும், அல்லது வெறுக்க முடியும். ஒரு காலத்தில் விரும்பியதை மற்றொரு காலத்தில் வெறுக்கவோ, அல்லது ஒரு காலத்தில் வெறுத்ததை மற்றொரு காலத்தில் விரும்பவோ முடியும். ஆனால் ஒரே காலத்தில் ஒரே பொருளின் மீது, விருப்பு—வெறுப்பு இரண்டையும் செலுத்த நாம் விரும்புவதுமில்லை; செலுத்துவது நம்மால் முடிவதுமில்லை. ஆனால் அறிஞர். திரு. வி. க. அவர்களே இந்த வித்தையில் கைதேர்ந்த கலைஞர். எதனிடமும் அவர் மிகுந்த விருப்பமோ அடர்ந்த வெறுப்போ கொள்வதில்லை. ஒன்றை உயர்ந்தது என்று போற்றிப் புகழ்வதையும் அவரிடம் காண முடியாது. மற்றொன்றை தாழ்ந்தது என்று வெறுத்து ஒதுக்குவதையும் அவரிடம் பார்க்க முடியாது. ஒவ்வொன்றிலும் உயர்வு—தாழ்வு இரண்டு தன்மைகளும் அமைந்து கிடக்கின்றன என்பது அவருடைய அசைக்க முடியாத கொள்கை. இதுதான் அவருடைய வாழ்க்கைத் தத்துவமும் கூட. இந்தத் தத்துவம் அவரிடம் அமைந்து கிடப்பதால்தான் அவர் எல்லோராலும் விரும்பப் படுகிறார். இதனாலேயேதான் அவர் எல்லோராலும் தூற்றவும் படுகிறார்.

எதையும் சட்டென்று சிந்தித்து, திடீரென்று ஒரு முடிவுக்கு வந்து, தடதடவென்று காரியத்தில் இறங்கும் பண்பு திரு. வி. க. அவர்கட்குக் கிடையாது. "அப்படிப் போனால் இப்படி ஆகுமே" "இப்படிப் போனால் அப்படி ஆகுமே" என்று எந்தச் செயல் பற்றியும் நீளச் சிந்திப்பார் சிந்தித்துச் சிந்தித்துப்பார்ப்பார். ஏதேனும் ஒரு பிரச்சனையைப் பற்றி அவர் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவதற்குள்ளாக அந்தப் பிரச்சினைக்குரிய முக்கியத்துவம் மறைந்து காலமும் கடந்துவிடும். புதிய பிரச்சினைகள் மக்கள் மன்றத்தில் நடயாடத் தொடங்கிவிடும். ஆகவே அவர் பழைய பிரச்சினைகளை விட்டு விட்டு புதிய பிரச்சினைகளைப் பற்றி சிந்திக்கத் தொடங்கிவிடுவார். இந்தச் சிந்தனை முடிவதற்குள்ளாக இந்தப் பிரச்சினைகளும் மறைந்து வேறு சில பிரச்சனைகள் நாட்டில் அலைமோதும். இவருடைய சிந்தனையும் உடனே இடம் பெயர்ந்து மாறிப்புது இடம் நாடும். இந்தச் சக்கரம் இவருடைய வாழ்க்கையில் ஓயாமல் சுழன்று கொண்டே இருக்கும். இதனால் இவரால் பெற்றிருக்க வேண்டிய எவ்வளவோ பெரும் பயனைத் தமிழ்நாடு இழந்து விட்டது. எதையும் சிந்தித்துப் பார்த்துச் செய்ய வேண்

டியதுதான். ஆனால் சிந்தனையிலேயே நேரம் முழுவதையும் செலவழித்து விட்டால் செயலாற்றுவது தான் எப்போது? இதைத் திரு. வி. க அவர்கள் தம் வாழ்க்கையில் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை.

சிலரிடம் சிந்தனை குறைவாகவும் செயல் அதிகமாகவும் இருக்கும். அப்படிப்பட்டவர்களை நாம் பார்க்கும் போது இவர்களிடம் செயல் சற்றே குறைந்து சிந்தனை மட்டும் கொஞ்சம் கூடுதலாக இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று நாம் நினைப்பதுண்டு. ஆனால் திரு. வி. க. அவர்களைக் காணும் போதோ இந்த மனிதருக்கு ஏனோ இவ்வளவு சிந்தனை என்ற எண்ணமே நம் உள்ளத்தில் எழுகிறது.

இந்த "அளவு கடந்த சிந்தனை"யால் செயல் முனையில் அவருக்கு உரிய இடம் மிகமிகக் குறைந்து விட்டது என்றாலும் மக்கள் உள்ளத்தில் அவருடைய இடம் கொஞ்சமும் குறையவில்லை மாறாக, வளர்ந்தது; மேலும் மேலும் வளர்ந்தது. இன்றோ, தமிழ் உள்ளத்தில் அவருடைய குழந்தை உள்ளம் இரண்டறக் கலந்து விட்டது. அதிலே வியப்பதற்கு என்ன இருக்கிறது? குழந்தை உள்ளம் படைத்த அந்த "சாது முதலியாரை" விரும்பாதவர்கள் யார் இருக்கமுடியும்? தமிழகத்திலே, தென்றலின் இன்பத்தை வெறுப்பவர்கள் இருக்கக் கூடும்; யாழில் தெறிக்கும் நல்லிசைக்கு மயங்க மறுப்பவர்கள் வாழக்கூடும்; தொட்ட இடமெல்லாம் இனிக்கும் சங்க இலக்கியத்தை வேம்பென எண்ணுவோரும் உலவக்கூடும். ஆனால் அறிஞர் திரு. வி. க. வை— அந்த இனிய தமிழ் மொழியை —அந்த ஒப்பற்ற சங்க இலக்கியத்தை விரும்பாதவர்களயாரும் இருக்க முடியாது

"திருக்குறள்" போன்றவர் திரு. வி. க. திருக்குறள் எப்படி எல்லோராலும் விரும்பப் படுகின்றதோ அப்படியே திரு. வி. க அவர்களும் அனைவராலும் போற்றப்படுபவர். திரு. வி. க. வின் இல்லத்திற்குச் சென்றால் அங்கே தேசிய மாணவர்களைக் காணலாம்; சுயமரியாதை இளைஞர்களைக் காணலாம்; பொது உடைமைத் தோழர்களையும் காணலாம் சைவ சித்தாந்த நிபுணர்கள் அங்கு வருவர்; வைணவ மத வைராக்கியர்கள் அங்கு வருவர், புத்த மத பிட்சுக்களும் அங்கு வருவர். அந்த இடம் வைதீக வீணர்கட்கும் பிடிக்கும், அதிதீவிர வாதிகட்கும் பிடிக்கும்; பழங்காலப்பண்டிதர்க்கும் பிடிக்கும். ஏழை உழவனை, பஞ்சாலைத் தொழிலாளியை, சோதிட எத்தனை, பள்ளி ஆசிரியனை, மருத்துவப் புலவனை எவரையும் "சாது அச்சுக் கூடம்" கையேந்தி வாவேற்கும். எல்லேரும் அவரை விரும்புவர்; எல்லோரும் அவரைப் போற்றுவர்; எல்லோரும் அவரைப் புகழ்வர்; எல்லோரும் அவரைத் தூற்றுவர். ஆம், அவர் எல்லோருக்கும் உரியவர். எவரையும் பழிக்காதவர். அனைவர்க்கும் நண்பர்; நல்லாசிரியர்; வழிகாட்டி. நாட்டின் பொதுச் சொத்து. ஆம்! அவர் ஓர் நடமாடும் திருக்குறள்! அதோ கவிஞர் பாரதிதாசன் கூறுகிறார்:—

"இத்துயர் கொள் தமிழ்
நாட்டில் என மகிழச்
செய்தனவாய்
இருப்பவற்றுள்
முத்தமிழ்வாய், உழைப்பாளிக்
குழைக் குந்தோள்,
அன்புள்ளம்,
தமிழெழுத்தை
வித்தியுயர் விளைக்கும்
விரல், தமிழருக்கோர்
தலைமையெனில்
விரைந்தோடும் கால்
இத்தனைதான கலியாண
சுந்தரனார்
என்ற பொதுச்
சொத்தும் ஒன்றே.

கலியாணசுந்தரனாரின் மொழி செல்லாத இடமில்லை, அவர் சொல் நில்லாத கட்சி இல்லை. அவர் தம் அரும் தொண்டைப் பெறாத இயக்கமில்லை. "எங்கும் நிறை நாதப் பிரம்ம"மும் அவர். எதிலும் இல்லாத வெறும் சூன்யமும் அவர். கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பு அவர். நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடு நின்ற நடுவும் அவர். அவர் எந்த இயக்கத்தில் இருக்கிறார்? எதிலும் இல்லை. அவர் எந்த இயக்கத்தில் இல்லை? எல்லாவற்றிலும் இருக்கிறார். இது என்ன புதிர் எனலாம் சிலர். இந்தப் புதிர்தான் திரு. வி. க.

திரு. வி. க. வின் மேடைப் பேச்சு தனிச் சிறப்புடையது. ஒரு கூட்டத்திற்குச் சென்றதும் அங்குத் திரண்டு குழுமியுள்ள மக்களின் இயற்கையையும், அவர்கள் மனநிலையையும் அவர்கட்கு ஒத்த கருத்துக்கள் இன்னின்னவை என்பதையும், அவர்கட்கு மாறான கருத்துக்கள் இன்னின்னவை என்பதையும் குறிப்பாக உணர்ந்து கொள்வார். பிறகு,—அவர்கள் திரு. வி. க. வின் போக்குக்கு எவ்வளவு மாறுபட்டவர்களாய் இருப்பினும் சரியே — விரும்பி விரும்பிக் கேட்கும் வண்ணம்

(10-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)